**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI,**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No:24/2017**

**Dated:24.11.2025**

**Deposition of Witnesses for PW -4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. அருள் | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி தர்ஹா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகீறேன். கடந்த 23.08.2015ம் தேதி இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்த போது கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண் 379/2015 வழக்கின் தலைமறைவு எதிரி செல்வராணி என்பவரை பற்றி திரு. பெரியசாமி காவல் ஆய்வாளர் நகர் காவல் நிலையம் பொறுப்பு கேணிக்கரை காவல்நிலைய அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி திரு. பெரியசாமி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு நான் மற்றும் என்னுடன் பணிபுரிந்த மு.நிகா. லதா ஆகீயோருடன் இராமநாதபுரம் ஒம்சக்தி நகர் பகுதியில் மதியம் 14.30 மணிக்கு கண்காணித்த போது ஓம்சக்தி கோவில் அருகில் எதிரி செல்வராணி அந்த வழியாக வந்து கொண்டிருந்தவரை காவல் ஆய்வாளர் அவர்கள்

காரணம் கூறி கைது செய்து அவர்கள் எதிரி செல்வராணியை பற்றி விசாரிக்க வாலந்தரவை சேர்ந்த தர்மா ,கார்த்திக் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றும் மேற்படி இருவரும் கஞ்சா விற்பணை செய்து வருவதாகவும் அதில் அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதாகவும் சகோதரர் கார்த்திக் தேனியில் இருந்து மொத்தமாக கஞ்சா வாங்கி வந்து பிரித்து பொட்டலமாக போட்டு விற்பனை செய்து வருவதாகவும் 15.08.2015ம் தேதி மதியம் 12.30 மணியளவில் வாலந்தரவை அம்மன் கோவில் அருகில் தானும் தன் தம்பி கார்த்திக் , ராஜா ஆகியோருடன் பொட்டலம் போட்டுக்கொண்டிருக்கும் போது போலீசார் அந்த வழியாக வருவதைகண்டு தானும் தன் தம்பி கார்த்திக் ஓடிவிட்டதாகவும் ராஜா என்பவர் மட்டும் போலீசாரிடம் மாட்டிக்கொண்டதாகவும் அதில் இருந்து தலைமறைவாக இருந்து வந்ததாகவும் கூறினார்.(இது குறித்து எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மேற் சொன்ன சாட்சியத்தை ஆட்சேபித்தார். இது குறித்து பரிசீலிக்கப்பட்டது. சாட்சி ஒப்புதல் வாக்குமூல சங்கதிகளாக மேற்சொன்ன விபரங்களை குறிப்பிடவில்லை என்பதால் ஆட்சேபனை ஏற்கபடவில்லை). அதனை கேட்ட ஆய்வாளர் செல்வராணியை காரணம் கூறி கைது செய்தார். அப்போது நான் உதவியாக உடன் இருந்தேன்.எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ15,000/-யை எதிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம் எங்கள் முன்னிலையில் ஒப்படைத்தார், அதனை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் அந்த அத்தாட்சியில் நானும் மு.நிகா. லதா என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி ஆகும். அதில் சாட்சியாக உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது ஆகும்.அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்பு எதிரி செல்வராணி 14.45 மணிக்கு ஆய்வாளர் முன்னிலையில் செல்வராணி என் முன்னிலையிலும் மு.நிகா லதா முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை ஆய்வாளர் எதிரியை விசாரித்து எதிரி சொன்னதை சொல்லசொல்ல நான் எழுதினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அதில் சாட்சியாக உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது ஆகும்.அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்னர் தடய சொத்துடன் எதிரியையும் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கின் காவலுக்கு உட்படுத்த ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை ஆய்வாளர் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் என்னை ஆய்வாளர் கேணிக்கரை காவல் நிலையத்தில் 16.30 மணிக்கு என்னை விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன எதிரி செல்வராணி சொன்னதாக சொன்ன விசயங்களை நான் ஆய்வாளர் வசம் சொன்னேன் அதை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார். அத்தாட்சி யார் எழுதினார் என்றால் ஆய்வாளர் எழுதினார் நானோ என்னுடன் வந்த லதாவோ எழுதவில்லை என்றால் சரிதான். ஓம்சக்தி கோவில் அருகில் எந்த திசையில் எதிரியை பிடித்தோம் என ஆய்வாளர் விசாரணையிலோ அல்லது முதல் விசாரணையிலோ, ஆவணங்களிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெற்றோமா என்றால் கையொப்பம் பெற்றோம்.செல்வராணி பணத்தை கையில் வைத்திருந்தாரா அல்லது வேறு எங்கும் வைத்திருந்தார் என்று முதல் விசாரணையிலோ, ஆவணங்களிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.சம்பவ இடம் குறித்து ஆய்வாளர் பார்வை மகஜர் , வரைபடம் ஏதும் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் ஓம்சக்தி கோவில் அருகில் கடைகள் வீடுகள் இருந்ததா என்றால் இருந்தது. அங்கு இருந்த நபர்களையோ விசாரித்து சாட்சிகளாக ஆய்வாளர் போடவில்லை என்றால் சரிதான் அவர்கள் சாட்சியாக இருக்க மறுத்ததால் சாட்சியாக போடவில்லை. இது குறித்து எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. இது குறித்து ஆவணத்திலோ அல்லது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அழைத்த தனிநபர் விபரங்களை ஆய்வாளர் குறித்துக்கொண்டரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன். ஆய்வாளர் விசாரணையில் போது பணத்தின் டினாமினேசன் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் எதிரி செல்வராணியை விசாரித்த போது வாலந்தரவை சேர்ந்த தர்மா ,கார்த்திக் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றும் மேற்படி இருவரும் கஞ்சா விற்பனை செய்து வருவதாகவும் அதில் அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதாகவும் சகோதரர் கார்த்திக் தேனியில் இருந்து மொத்தமாக கஞ்சா வாங்கி வந்து பிரித்து பொட்டலமாக போட்டு விற்பனை செய்து வருவதாகவும் 15.08.2015ம் தேதி மதியம் 12.30 மணியளவில் வாலந்தரவை அம்மன் கோவில் அருகில் தானும் தன் தம்பி கார்த்திக் , ராஜா ஆகியோருடன் பொட்டலம் போட்டுக்கொண்டிருக்கும் போது போலீசார் அந்த வழியாக வருவதைகண்டு தானும் தன் தம்பி கார்த்திக்

ஓடிவிட்டதாகவும் ராஜா என்பவர் மட்டும் போலீசாரிடம் மாட்டிக்கொண்டதாகவும் அதில் இருந்து தலைமறைவாக இருந்து வந்ததாகவும் கூறினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் இருந்து நபரை காவல் நிலையம் அழைத்து பொய்யாக இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணங்களுக்கு தகுந்தார் போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரியிடம் இருந்து சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் பணம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் எதிரியிடம் இருந்து பணம் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI,**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No:24/2017**

**Dated:24.11.2025**

**Deposition of Witnesses for PW -5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. லதா | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அயல் பணியாக குழந்தை கடத்தல் தடுப்பி பிரிவுல் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2015ம் தேதி இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்த போது கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண் 379/2015 வழக்கின் தலைமறைவு எதிரி செல்வராணி என்பவரை பற்றி திரு. பெரியசாமி காவல் ஆய்வாளர் நகர் காவல் நிலையம் பொறுப்பு கேணிக்கரை காவல்நிலைய அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி திரு. பெரியசாமி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு நான் மற்றும் என்னுடன் பணிபுரிந்த மு.நிகா. அருள் ஆகீயோருடன் இராமநாதபுரம் ஓம்சக்தி நகர் பகுதியில் மதியம் 14.30 மணிக்கு கண்காணித்த போது ஓம்சக்தி கோவில் அருகில் எதிரி செல்வராணி அந்த வழியாக வந்து

கொண்டிருந்தவரை காவல் ஆய்வாளர் அவர்கள் காரணம் கூறி கைது செய்து அவர்கள் எதிரி செல்வராணியை பற்றி விசாரிக்க வாலந்தரவை சேர்ந்த தர்மா ,கார்த்திக் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றும் மேற்படி இருவரும் கஞ்சா விற்பணை செய்து வருவதாகவும் அதில் அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதாகவும் சகோதரர் கார்த்திக் தேனியில் இருந்து மொத்தமாக கஞ்சா வாங்கி வந்து பிரித்து பொட்டலமாக போட்டு விற்பனை செய்து வருவதாகவும் 15.08.2015ம் தேதி மதியம் 12.30 மணியளவில் வாலந்தரவை அம்மன் கோவில் அருகில் தானும் தன் தம்பி கார்த்திக் , ராஜா ஆகியோருடன் பொட்டலம் போட்டுக்கொண்டிருக்கும் போது போலீசார் அந்த வழியாக வருவதைகண்டு தானும் தன் தம்பி கார்த்திக் ஓடிவிட்டதாகவும் ராஜா என்பவர் மட்டும் போலீசாரிடம் மாட்டிக்கொண்டதாகவும் அதில் இருந்து தலைமறைவாக இருந்து வந்ததாகவும் கூறினார்.(இது குறித்து எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மேற் சொன்ன சாட்சியத்தை ஆட்சேபித்தார். இது குறித்து பரிசீலிக்கப்பட்டது. சாட்சி ஒப்புதல் வாக்குமூல சங்கதிகளாக மேற்சொன்ன விபரங்களை குறிப்பிடவில்லை என்பதால் ஆட்சேபனை ஏற்கபடவில்லை). அதனை கேட்ட ஆய்வாளர் செல்வராணியை காரணம் கூறி கைது செய்தார். அப்போது நான் உதவியாக உடன் இருந்தேன்.எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கஞ்சா விற்று வைத்திருந்த பணம் ரூ15,000/—யை எதிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம் எங்கள் முன்னிலையில் ஒப்படைத்தார், அதனை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் அந்த அத்தாட்சியில் நானும் மு.நிகா. அருள் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி ஆகும். அதில் சாட்சியாக உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது ஆகும்.அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ 1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரி செல்வராணி 14.45 மணிக்கு ஆய்வாளர் முன்னிலையில் செல்வராணி என் முன்னிலையிலும் மு.நிகா அருள் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை ஆய்வாளர் எதிரியை விசாரித்து எதிரி சொன்னதை சொல்லசொல்ல அருள் எழுதினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அதில் சாட்சியாக உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது ஆகும்.அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்னர் தடய சொத்துடன் எதிரியையும் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கின் காவலுக்கு உட்படுத்த ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை ஆய்வாளர் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் என்னை ஆய்வாளர் கேணிக்கரை காவல் நிலையத்தில் 16.30 மணிக்கு என்னை விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன எதிரி செல்வராணி சொன்னதாக சொன்ன விசயங்களை நான் ஆய்வாளர் வசம் சொன்னேன் அதை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார். அத்தாட்சி யார் எழுதினார் என்றால் ஆய்வாளர் எழுதினார் நானோ என்னுடன் வந்த லதாவோ எழுதவில்லை என்றால் சரிதான். ஓம்சக்தி கோவில் அருகில் எந்த திசையில் எதிரியை பிடித்தோம் என ஆய்வாளர் விசாரணையிலோ அல்லது முதல் விசாரணையிலோ, ஆவணங்களிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெற்றோமா என்றால் கையொப்பம் பெற்றோம்.செல்வராணி பணத்தை கையில் வைத்திருந்தாரா அல்லது வேறு எங்கும் வைத்திருந்தார் என்று முதல் விசாரணையிலோ, ஆவணங்களிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.சம்பவ இடம் குறித்து ஆய்வாளர் பார்வை மகஜர் , வரைபடம் ஏதும் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் ஓம்சக்தி கோவில் அருகில் கடைகள் வீடுகள் இருந்ததா என்றால் இருந்தது. அங்கு இருந்த நபர்களையோ விசாரித்து சாட்சிகளாக ஆய்வாளர் போடவில்லை என்றால் சரிதான் அவர்கள் சாட்சியாக இருக்க மறுத்ததால் சாட்சியாக போடவில்லை. இது குறித்து எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. இது குறித்து ஆவணத்திலோ அல்லது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அழைத்த தனிநபர் விபரங்களை ஆய்வாளர் குறித்துக்கொண்டரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன். ஆய்வாளர் விசாரணையில் போது பணத்தின் டினாமினேசன் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் எதிரி செல்வராணியை விசாரித்த போது வாலந்தரவை சேர்ந்த தர்மா ,கார்த்திக் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றும் மேற்படி இருவரும் கஞ்சா விற்பணை செய்து வருவதாகவும் அதில் அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதாகவும் சகோதரர் கார்த்திக் தேனியில் இருந்து மொத்தமாக கஞ்சா வாங்கி வந்து பிரித்து பொட்டலமாக போட்டு விற்பனை செய்து வருவதாகவும் 15.08.2015ம் தேதி மதியம் 12.30 மணியளவில் வாலந்தரவை அம்மன் கோவில் அருகில் தானும் தன் தம்பி கார்த்திக் , ராஜா ஆகியோருடன் பொட்டலம் போட்டுக்கொண்டிருக்கும் போது போலீசார் அந்த வழியாக வருவதைகண்டு தானும் தன் தம்பி கார்த்திக்

ஓடிவிட்டதாகவும் ராஜா என்பவர் மட்டும் போலீசாரிடம் மாட்டிக்கொண்டதாகவும் அதில் இருந்து தலைமறைவாக இருந்து வந்ததாகவும் கூறினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் இருந்து நபரை காவல் நிலையம் அழைத்து பொய்யாக இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணங்களுக்கு தகுந்தார் போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரியிடம் இருந்து சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் பணம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் எதிரியிடம் இருந்து பணம் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.